இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 27 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 20 – வியாழக்கிழமை 05 செப்டம்பர் 2024 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 27 : Thiruvalluvar Year - 2055 - Aavani 20 - Thursday 05 September 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00






தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்க நாட்டிற்கு சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சான் பிரான்சிஸ்கோவிலிருந்து சிகாகோ சென்றடைந்தார். சிகாகோ விமான நிலையத்தில் அமெரிக்க வாழ் தமிழர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் திருமதி துர்கா ஸ்டாலின், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பலர் உள்ளனர்.

## மேளதாளங்கள் முழங்க

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிகாகோவில் சிறப்பான வரவேற்பு!

## முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிறது!

**சிகாகோ, செப். 5 -**

**சான்பிரான்சிஸ்கோவில் இருந்து சிகாகோ நகருக்குச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.**

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த மாதம் 27ம் தேதி சென்னையில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சான்பிரான்சிஸ்கோ சென்றார். அங்கு, உலகின் பல்வேறு முன்னணி தொழில்நிறுவனங்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. முதலமைச்சரின் அமெரிக்க



சிகாகோ விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமெரிக்க வாழ் தமிழர்கள் ஆரத்தி எடுத்து அன்புடன் வரவேற்ற காட்சி. உடன் திருமதி துர்கா ஸ்டாலின், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உள்ளனர்.

பயணத்தில் இதுவரை ஆயிரத்து 300 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. 4 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 8 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.

### 7ஆம் தேதி தமிழர்களுடன் கலந்துரையாடுகிறார் முதல்வர்!

இந்நிலையில், சான்பிரான்சிஸ்கோவில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிகாகோ சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. சிகாகோ விமான நிலையத்தில், அமெரிக்க வாழ் தமிழர்கள் திரண்டு நின்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மேள தாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பளித்தனர்.

சிகாகோவில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார். பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து ஆக உள்ளது. வருகின்ற ஏழாம் தேதி சிகாகோவில் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாட உள்ளார்.

### ஓட்டுநர் இல்லாத வாகனத்தில் பயணித்த முதல்வர்!

இதனிடையே, அமெரிக்காவில் ஓட்டுநர் இல்லாத வாகனத்தில் பயணித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தந்தை பெரியாரின் அறிவுலக வாசகங்களை நினைவு கூர்ந்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், **இன்று உலகத்தின் வேறு பல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும் அப்பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம் அந்நாட்டவர்கள், பழையவற்றோடு திருப்தி அடைந்து அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி அப்பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங்கொண்டு, நடுநிலைமை அறிவோடு, முயற்சித்ததின் பலனாலேயே ஏற்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளார்.**

---

# ஓசூரில் ரூ.100 கோடியில் டிராக்டர் தொழில்நுட்ப மையம்!

## வி.எஸ்.டி. நிறுவனம் அமைக்கிறது!

*ஓசூர், செப். 5 -*

*வி.எஸ்.டி. டில்லர்ஸ் & டிராக்டர்ஸ் நிறுவனம், ஓசூரில், 100 கோடி ரூபாயில் உலகளாவிய தொழில் நுட்ப மையத்தை அமைக்க உள்ளது.*

*இந்தியாவில், விவசாய உபகரணங்கள் மற்றும் டிராக்டர்கள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள வி.எஸ்.டி. டில்லர்ஸ் & டிராக்டர்ஸ் நிறுவனம், ஓசூரில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக, 100 கோடி ரூபாயில் உலகளாவிய தொழில் நுட்ப மையத்தை நிறுவுகிறது. இதன் மூலம், நிறுவனத்தின் திறன்களை மேம்படுத்த உள்ளது. வி.எஸ்.டி. டில்லர்ஸ் & டிராக்டர்ஸ் நிறுவனம் பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டு மின்சார வாகனங்களை உருவாக்கி வரும் நிலையில், மின்சார வாகனங்களின் உற்பத்தியை கண்காணிக்கவும், தனியுரிமை தொழில்நுட்பங்களை உருவாக்கவும் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்க்கவும், ஓசூரில் உலகளாவிய தொழில் நுட்ப மையம் வடிவமைக்கப்பட உள்ளது.*

---

## சென்னை சேத்துப்பட்டில் ஆய்வு மேற்கொண்டார்!

# தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்!

## கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் பாராட்டு!

**சென்னை, செப். 5 -**

**கர்நாடகா மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தலைமையிலான குழுவினர் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான செயல்பாட்டினை நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டனர். திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு பாராட்டுத் தெரிவித்தார்.**

அதன் விவரம் வருமாறு: –

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 6,150 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு பல்வேறு வழிகளில் மறுசுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது.



இதனைத் தொடர்ந்து, கர்நாடகா மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (3.9.2024) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருகை தந்து, மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டினை நேரில் பார்வையிட்டனர்.

முதலாவதாக, ஆலந்தூர் மண்டலத்தில் உள்ள உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் கண்காணிப்பு அறையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

பின்னர், அண்ணாநகர் மண்டலம், சேத்துப்பட்டில் நாள்தோறும் 100 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளிலிருந்து இயற்கை உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும், மாதவரம் மண்டலம், மாதவரத்தில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளைக் கொண்டு இயற்கை

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்